தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
**Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723**
[Impact Factor: 9.47] Monthly, Peer-Reviewed, Refereed, Indexed Journal with IC Value : 86.87
**Volume - 1, Issue - 09, June - 2025**

DOIs: https://doi.org/10.63300/tmxxxxxxxxxx --:-- Research Paper

# Marriages and their Challenges Depicted in Modern Novels

**Dr. T. Kavitha** M.A. (Journalism), M.A. (Tamil), Ph.D.,
Assistant Professor, Hindustan Deemed University 9841636662
Email: kavi6662@gmail.com .

***Abstract:*** *Marriages serve as both a cultural hallmark of human civilization and a socially recognized institution. The Tolkāppiyam, an ancient Tamil treatise, references Sanskrit literature in classifying marriages into eight traditional forms: Brahma, Daiva, Arsha, Prajapatya, Gandharva, Asura, Rakshasa, and Paisacha. However, evolving with time, modern society predominantly witnesses two distinct types of marriages—arranged and love marriages.This article examines their portrayal in contemporary literature, delving into the associated complexities, conflicts, and societal challenges they depict.*

***Key Words:*** *Marriage, Love Marriage, Dowry, Masculine action, Same Caste*

# நவீன புதினங்கள் சித்தரிக்கும் திருமணங்களும் அவற்றின் சவால்களும்

**முனைவர் த.கவிதா,** எம்.ஏ (இதழியல்), எம்.ஏ(தமிழ்) பி.எச்.டி
உதவிப் பேராசிரியர், இந்துஸ்தான் நிகர்நிலைப் பல்கலைக் கழகம்
Email: **kavi6662@gmail.com**.

***Abstract:*** *திருமணம் என்பது மனித சமூக கலாச்சாரத்தின் ஒரு முக்கிய அடையாளம் மற்றும் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட சமூக நிறுவனம் ஆகும். பண்டைய தமிழ் நூலான தொல்காப்பியம், சமஸ்கிருத நூல்களை மேற்கோள் காட்டி, திருமணங்களை எட்டு பாரம்பரிய வகைகளாகப் பிரித்துக் கூறியது: பிரம்மம், தெய்வம், ஆர்ஷம், பிரஜாபத்யம், காந்தர்வம், அசுரம், ராக்ஷஸம், பைசாசம். இருப்பினும், காலப்போக்கில் பெரிதும் மாறிவிட்ட நவீன சமூகத்தில், முக்கியமாக இரு திருமண வகைகள் காணப்படுகின்றன: ஏற்பாடு செய்யப்பட்ட திருமணங்கள் மற்றும் காதல் திருமணங்கள். இந்தக் கட்டுரை, நவீன இலக்கியங்களில் இந்த இரு சமகாலத் திருமண வகைகள் எவ்வாறு சித்தரிக்கப்படுகின்றன என்பதை ஆராய்ந்து, அவை காட்டும் சிக்கல்கள், மோதல்கள் மற்றும் சமூக சவால்களைப் பற்றி விவரிக்கிறது.*

***குறிப்பு சொற்கள்*** *: பழக்கவழக்கங்கள், திருமணம், காதல் திருமணம், வரதட்சணை, ஆண்மையச்செயல்பாடு, ஆடம்பரம், சுய சாதி*

## 1. அறிமுகம் (Introduction):

மனிதனின் பண்பாட்டு அடையாளமாகவும் சமூக அறிந்தேற்பாகவும் திருமணங்கள் விளங்குகின்றன.வடமொழி இலக்கியம் பிரமம், ஆரிடம், பிரசாபத்தியம், தெய்வம், கந்தர்வம், ஆசுரம், இராட்சதம், பைசாசம் என 8 வகையான திருமணங்களைக் குறித்து கூறுவதாகத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது..கால மாற்றத்திற்கேற்றாற் போல் மாறி இன்று இருவகையான திருமணங்கள் நவீனச் சமூகத்தில் நடை பெற்று வருகிறது. அவை நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள் மற்றும் காதல் திருமணங்கள். இவை நவீன இலக்கியங்களில் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளன அவற்றில் இடம் பெறும் சிக்கல்கள் மற்றும் சவால்கள் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

### திருமணம்

ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் உறவுகொண்டு சேர்ந்து வாழ்வதற்கான அனுமதியாகத் திருமணம் விளங்குகிறது. "மனித இனம் தன் பாலியல் உந்துதலை நிறுவன அமைப்பிற்குள் நிறைவு செய்துகொள்ள ஏற்படுத்திய முறையே திருமணமாகும். உயர் பாலூட்டிகளிடமும் பிற கீழின விலங்குகளிடமும் பாலுறவு ஓர் உயிரியல் செயலாக மட்டுமே நிகழ்கின்றது. ஆனால் மனிதர்கள் அடிப்படையில் சமுதாய, பண்பாட்டு விலங்காதலால், அவ்வுயிரியல் செயலைத் திருமணம் என்னும்

நிறுவனச் செயலாக்கி அவர்கள் தம் உள-உயிரியல் உந்துதல்களை நிறைவு செய்து கொள்கின்றனர்."(பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், ப.368). திருமணம் மூலமே குடும்பம் என்ற அமைப்பு நிறுவப்படுகிறது. எட்டு வகையான திருமணங்கள் குறித்து, தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இதில் களவுமுறை என வழங்கப்படும் முறையையே தமிழர் பின்பற்றினர். பொருத்தமான ஆணும் பெண்ணும் மனம் ஒப்பி இணைந்து வாழும் மணமுறையே இம்மணமுறையின் வழக்கம். இத்தகைய திருமணம் தற்காலத்தில் இருவிதமாக நடைபெறுகிறது. நிச்சயிக்கப்பட்ட திருமணம், காதல் திருமணம் என இருவகை மணங்களும் இக்காலத்தில் நடைபெறுகின்றன.

**நிச்சயிக்கப்பட்ட திருமணம்**

பெற்றோர் மற்றும் உறவினர் கூடி நிச்சயித்து நடத்தும் திருமணம் நிச்சயிக்கப்பட்ட திருமணம் எனப்படுகிறது. நட்சத்திரவாசிகள் புதினத்தில் நித்திலன்-மீரா திருமணம் நிச்சயிக்கப்பட்ட திருமணமாக உள்ளது. நித்திலனுக்கும் மீராவுக்கும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் நடைபெறுகிறது. நிச்சயிக்கப்பட்ட திருமணத்தில் புறவயக் கூறுகள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படுகின்றன. இத்தகைய திருமணங்கள் சுய சாதிக்குள் மட்டுமே நடைபெறுகின்றன. சாதி பொருளாதாரநிலை, புற அழகு ஆகியவற்றை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படுகிறது.நட்சத்திரவாசிகள் என்ற புதினத்தில், "மீராவின் அப்பா மத்திய அரசு அதிகாரி. அவரின் வேலையின் பொருட்டு இந்தியாவின் பிரதான நகரங்கள் பெரும்பாலானவற்றில் வசித்து வந்தவர்கள் அவளின் குடும்பத்தினர். இவனுடைய குடும்பம் முழுக்க முழுக்க வியாபாரத்தைப் பின்னணியாகக் கொண்டது. அப்பா, சிற்றப்பா, மாமாக்கள் என அத்தனை பேரும் வியாபாரத்தில் இருந்தார்கள்." (கார்த்திக் பாலசுப்ரமணியன்., நட்சத்திரவாசிகள், ப.52)

இரு வேறுபட்ட பழக்க வழக்கங்களும் வாழ்க்கை முறையும் கொண்ட இரு குடும்பத்தார் இணைய முடிவெடுக்க காரணம் அவர்களது சாதியும், பொருளாதார நிலையும், அழகுமே என்பதை உறுதியாகக் கூறமுடியும். மீரா- நித்திலன் திருமணத்தில் மீராவின் புகைப்படத்தைப் பார்த்துச் சம்மதிப்பதும் முதல் சந்திப்பில் "முழுக்கை வைத்த சுத்த வெள்ளைச் சுடிதார். அதன்மேல் ஒரு பக்கமாய்ப் போடப்பட்டிருந்த மஞ்சள் நிற ஷால், அலையலையாய் நெற்றியின் முன்னால் வந்து விழுந்த கேசத்தை அவள் ஒதுக்கிய பாவத்தில் அதுவரை கற்பனை கூட செய்து பார்த்திராத தேவதையின் சாயல் இருந்ததை அவன் கவனிக்கத் தவறவில்லை." (மேலது, ப.54 )ஆனால் முற்காலத்தில் இருந்த அளவு கட்டுப்பாடுகள் நிச்சயிக்கபட்ட ஆணுக்கும் பெண்ணுக்கும் தற்காலத்தில் இல்லை. திருமண ஏற்பாடுகளில் பங்கு பெற்று அழைப்பிதழ், உணவு, அழைக்கவேண்டியவர், உடை எனப் பல்வேறு முடிவுகளை மணமகனும் மணமகளுமே முடிவு செய்கின்றனர். 'திருமணத்துக்குக் கூப்பிட வேண்டிய நபர்களைப் பட்டியலிட்டார்கள். இருவரும் சேர்ந்து நண்பர்களுக்குத் தருவதற்கான பத்திரிக்கை மாதிரியைத் தெரிவு செய்தார்கள்". (மேலது, ப.56) என்ற கூற்று, சான்று பகர்கிறது.

நிச்சயிக்கப்பட்ட திருமணங்களில் பெற் றோரின் கண்காணிப்பு உண்டு. திருமணமாகிச் சில மாதங்கள் கழிந்ததும் நித்திலனின் தாய் குழந்தை பெற்றுக்கொள்ள வலியுறுத்துவதும் விவேக்கிற்குத் திருமணம் நிச்சயிக்க முடிவு செய்யும் போது விவேக்கின் தாய் அத்தேர்வில் முடிவெடுக்கும் நிலையிலிருப்பதும் இவற்றை உறுதி செய்கின்றன. பொருளாதாரப் பின்புலம், சுயசாதிப் பாதுகாப்பு, பெற்றோர் மற்றும் உறவினர் உதவி போன்றவை இருந்தபோதும் இவ்வகைத் திருமணங்களில் சில சிக்கல்கள் உள்ளன. வரதட்சணை, ஆண் மையச் செயல்பாடு, பழக்கவழக்க முரண்கள், ஆடம்பரம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**வரதட்சணை**

நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள் வரதட்சணையை அடிப்படையாகக் கொண்டே நிச்சயிக்கப்படுகின்றன எனக் கூற முடியும். தூப்புக்காரிப் புதினத்தில் மனோவின் அண்ணனுடைய திருமணம் மிகவும் ஆடம்பரமாக நடைபெறுகிறது. பெண் வீட்டிலிருந்து கிடைக்கும் பலன்களை முன்னிட்டு மனோவுக்கும் அதே வீட்டிலுள்ள பெண்ணைத் திருமணம் செய்கிறார்கள். அதே நேரத்தில் கனகம் தன் பெண்ணுக்குத் தன்னுடைய சாதியில் திருமணம் செய்ய இயலாமல் சிரமப்படுவதற்கு வரதட்சணையே காரணமாக உள்ளது. இதனால் வறுமையில் உழலும் கனகம் தன் மகள் யாராவது ஒருவனைக் காதலித்து மணமுடிக்க வேண்டும் என நினைப்பதிலிருந்து புரிந்து கொள்ள இயலுகிறது.

"ஒருத்தனுக்க கண்ணுக்கும் எம் பெண்ண தெரியிலேயே. ஒருத்தன் ஸ்னேகிச்சி கெட்ட வரமாட்டானான்னு எத்தனையோ நாளு நெனச்சிருப்பேன்." சாதிப்பிடிப்பும் பழைமையும் ஊறிப்போன ஒரு பெண் தன் மகள் ஒருவனைக் (மலர்வதி, தூப்புக்காரி, ப.24) காதலித்து மணமுடித்துக் கொண்டால் நன்றாக இருக்கும் என எண்ணுகிறாள் என்றால் வரதட்சணையின் கொடுமையை உணர இயலும்.

திருமணமே பெண்ணுக்கான குறிக்கோளாகக் கட்டமைக்கப்பட்டிருந்தாலும் அதை நிறைவேற்றுவதிலும் பல இன்னல்களைப் பெண்கள் சந்திக்கின்றனர். அதில் முக்கியமான பங்கு வகிப்பது வரதட்சணை. உயர்ந்தசாதி, தாழ்த்தப்பட்ட சாதி, பணக்காரன், ஏழை என வேறுபாடின்றி வரதட்சணைக் கொடுமைக்கு உள்ளாகின்றனர். பணக்காரர்கள் தங்கள் பகட்டை வெளிப்படுத்த வரதட்சணையை

வாங்கவோ கொடுக்கவோ செய்கின்றனர். இதை ஏழை மக்களும் கடைப்பிடிக்கின்றனர். தங்க நகைகள் பெண்களின் திருமணத்தில் மிகப்பெரிய பங்கு வகிக்கின்றன. ஆடம்பரமாக நகைகளை அணிந்து கொண்டு வரும் பெண்களைப் பார்த்து “ஒருத்திக்குக் கழுத்துல கிடக்கிறதுல ஒரு மாலை உண்டெண்ணா எனக்க குட்டிக்குக் கல்யாணத்துக்கே தெவையும் (மேலது, ப.40) என்னும் றோஸ்சிலியின் கூற்று இதன் பின்னணியைப் புலப்படுத்துகிறது. பணம் படைத்தவர்கள் பின்பற்றுவதால் ஏழைகளும் செய்தாக வேண்டிய கட்டாயத்தை இது உணர்த்துகிறது.

சுயசாதித் திருமணங்களே வரதட்சணைக்கான ஊற்றுக்கண்ணாக விளங்குகிறது. இப்ப இருக்கிய நெலமையில நம்ம சாதியில அஞ்சி பத்துன்னு லெட்சம் கேக்கிறானுங்க (மேலது, ப.38) என்ற கூற்று இதற்குச் சான்றாகிறது. வரதட்சணை கொடுக்க இயலாத ஏழைப் பெண்களின் திருமணம் வருடக் கணக்கில் தள்ளிப் போவதும் உண்டு. “ஏதாவது ஒரு பாவப்பட்டவன் கூடப் பிடிச்சு கொடுக்கவும் வழியத்து போயிட்டேனே” (மேலது, ப.84) என்ற கனகத்தின் ஆதங்கமும் "பதினேழு பேர் வந்து பெண் பார்த்துட்டு பெயி என்ன பிரயோசனம்? ஒருத்தனாவது கெட்ட வந்தானா...? பாவம் எங்குட்டி அதோட மனசெல்லாம் இப்ப மரத்துப் போச்சி" (மேலது, ப.79) என்ற கூற்றும் இதனை மெய்ப்பிக்கிறது. “அந்தஸ்து இல்லாத பல பெண்ணுங்க கல்யாண சந்தையில் பிறமத்தான்” (மேலது, ப.80 )என்ற றோஸ்சிலியின் கருத்து இங்கே சுட்டத்தக்கது. இதன் காரணமாகவே சமூகத்தில் உள்ளவர்களின் உதாசீனத்திற்கு ஆளாகிறார்கள். “மொவள யாருட்ட வேணும்னாலும் காய்(காசு) பிரிச்சு விடு. ஆனா என் மொவன விட்டுடுங்க” (மேலது, ப.80)என்ற கூற்று இப்பெண்கள் நிலையைப் பதிவு செய்கிறது.

நாகரிக வளர்ச்சி பெரிய அளவில் எட்டாத கிராமங்களில் பொருளாதார நிலையை மட்டுமே கருத்தில் கொள்கிறார்கள். புற அழகு குறித்து அக்கறை கொள்வதில்லை என்பதைக் கால்கள் புதினம் வழியாக அறிந்து கொள்ள இயலும். “ஷீனா தனக்கு மாப்பிள்ளை பார்த்திருப்பதாய் ஆர்வமாய்ச் சொன்னாள். குவைத்தில் ஒரு பள்ளிக் கூடத்தில் கணித ஆசிரியர். அவள் சொன்னாள் ‘என்னை விட கொஞ்சம் குள்ளம். போட்டோ பார்த்து நான் கெஸ் பண்ணினது தான்”(ஆர்.அபிலாஷ், கால்கள், ப.378) வரதட்சணைக் கொடுமைகளால் பெண்கள் கொடுமைப்படுத்தப்படுவதும் கொலை செய்யப்படுவதும் தொடர்ந்து நடந்த வண்ணமே உள்ளது. "ஷீனாவின் அக்காவுக்குப் போன வருடம் கல்யாணம் ஆனது. இரண்டே மாதத்தில் கேஸ் வெடித்து இறந்து போனாள். தற்கொலை என்று பத்திரிகையில் செய்தி வந்தது. ஆனால் அது வரதட்சணைக் கொடுமையின் விளைவான கொலை என்று ஷீனாவின் அப்பா வழக்குத் தொடுத்தார்." (மேலது, ப.378) வரதட்சணை, படித்த பெண்களையும் பாமரப் பெண்களையும் ஒரே போல பாதிக்கிறது என்பது தெரியவருகிறது. பெண் அடக்குமுறை, சுயசாதித் திருமணம் போன்றவை நெகிழ்வுத் தன்மை அடையும் போது வரதட்சணையால் பெண்கள் பாதிக்கப்படுவது குறையலாம்.

சேவல் கட்டில் சேவுகன் மற்றும் அவன் மனைவி, போத்தைய்யா மற்றும் அவர் மனைவி, கால்கள் புதினத்தில் மதுவின் பெற்றோர், பேராசிரியர் மற்றும் அவர் மனைவி, நட்சத்திரவாசிகள் புதினத்தில் வரும் விவேக்கின் பெற்றோர் எனச் சென்ற தலைமுறையைச் சேர்ந்தோர் வாழ்வில் விட்டுக் கொடுத்தல், சகித்துக் கொள்ளுதல் போன்றவற்றின் வாயிலாகக் குடும்ப அமைப்பு, கேள்விக்குள்ளாகாமல் பார்த்துக் கொள்கின்றனர். எனவே வரதட்சணைப் பிரச்சினையை இவர்கள் அனுபவிப்பதில்லை. அல்லது அதன் தீவிரத்தைக் கடந்து விட்டனர் என்ற முடிவுக்கு வர இயலுகிறது. அதாவது திருமணமான ஆரம்ப காலத்திலேயே இப்பிரச்சினை பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது.

**பழக்க வழக்க முரண்கள்**

ஒவ்வொருவடைய வாழ்விலும் அவரவருக்கான தனித்த பழக்கவழக்கங்கள் இடம் பெற்றிருக்கும். இதுவே அவர்களின் அடையாளமாகவும் வரித்துக் கொள்ளப்படும். இந்த பழக்கவழக்கங்கள் சாதி, சமயப் பழக்க வழக்கங்கள், அன்றாடப் பழக்கவழக்கங்கள் என இருவகைப்படும். இந்தப் பழக்க வழக்கங்களில் ஏற்படும் முரண்களினால் குறிப்பிட்ட ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்படும் சிக்கல்களே இன்றைய திருமண முறிவுக்கு முக்கியக் காரணமாகத் திகழ்கிறது. “பாத்ரூமில் போய் முகத்தைக் கழுவிட்டு நிமிர்ந்ததும் அங்கே உள்ளாடைகள் வரிசையாக அணிவகுத்துத் தொங்கிக் கொண்டிருந்தன. அந்த வாரத்துக்கான மொத்தமும் அங்கே அழுக்காய்த் தொங்கிக் கொண்டிருந்தன. இரண்டு நாட்களாய் அவற்றைக் கவனித்து வந்தவள் நேற்று அவற்றைப்பற்றிப் கூறியும் அப்படி அப்படியே அவை தொங்கிக் கொண்டிருந்தன.” (கார்த்திக் பாலசுப்ரமணியன், நட்சத்திரவாசிகள், ப. 76) இது நிச்சயிக்கப்பட்ட திருமணம் முடித்த மீரா-நித்திலன் வீட்டின் ஒரு நடைமுறை. நித்திலன் தன் அன்றாட வேலைகளைக் கூட தானே செய்து கொள்ள மறுக்கிறான். இது கணவன் மனைவி இருவருக்குமான வாக்குவாதத்தை ஏற்படுத்தும் காரணியாக அமைகிறது. மீரா நகரத்துப் பின்புலத்தில் பிறந்து வளர்ந்ததால் நடைமுறைகளில் தெளிவும் ஒழுங்கும் நிறைந்தவளாக இருக்கிறாள். ஆனால் நித்திலன் அதற்கு நேரெதிரானவனாக இருக்கிறான். "அழுக்கு டீ சர்ட் சோபாவில் கழற்றி போடப்பட்டிருந்தது. ஷூ ஸ்டாண்டில் பழைய சாக்ஸ், சோபாவில் ஈரத்துடன், பரப்பிப்போடப்பட்டிருந்த துண்டு, இரண்டு அறைகளிலும் அணைக்கப்படாத மின்விசிறிகள், டியூப் லைட்டுகள், சாப்பாட்டு மேசையின் மேல் வைக்கப்பட்ட சட்னியுடன் காய்ந்துபோன தட்டு, கண்ணாடியின் முன் கீழே கிடந்த சீப்பு என எதிலும் ஒழுங்கைக் கடைப்பிடிக்காதவனாக இருக்கிறான்." (மேலது, ப.76) இதற்குக் காரணம் இவர்கள் வளர்ந்த பின்புலமே. “உத்தியோகஸ்தர்களுக்கே உரித்தான முறையான திட்டமிடல், திருந்திய பேச்சு, குறித்த நேரத்தில் நிகழ்வு என்று ஒருபக்கம் வியாபாரிகளுக்கு உண்டான திடீர்

மாற்றங்கள், அதிரடி யோசனைகள், குழைவுப் பேச்சு என்று மறுபக்கம். வெவ்வேறு பழக்கவழக்கங்கள் வெவ்வேறு மனப்போக்கு" (மேலது, ப.53)என்ற நிலையைக் காணமுடிகிறது.

இந்த முரண்களைத் திருமணம் செய்ய நிச்சயிக்கும் போது யாரும் கருத்தில் கொள்வதில்லை. முதலில் இதெல்லாம் அவளுக்குப் பெரிய குறையாகத் தெரியவில்லை. சின்னச் சின்ன பழக்கவழக்கங்கள் தானே, சொல்லித் திருத்தி விடலாம் என்று நினைத்திருந்தாள்" (மேலது, ப.76) இதிலிருந்து பழக்கவழக்க முரண்களை முக்கியமானதாக யாரும் கருதுவதில்லை என்பது புலனாகிறது.

**ஆண் மையச் செயல்பாடு**

நிச்சயிக்கப்பட்ட திருமணங்களில் ஆண் மையச் செயல்பாடுகளே வழக்கமாக கடைப்பிடிக்கப்படுகிறது. திருமணத்திற்குப் பின் பெண்ணின் குலதெய்வம் வழிபடப்படாமல் ஆணின் குலதெய்வமே பெண்ணுடையதாக மாறுவதையும், ஆணின் குடும்ப நிகழ்வுகளே பெண்ணுடைய குடும்ப நிகழ்வுகளாகக் கருதப்படுவதையும் எடுத்துக்காட்டாகக் கூறலாம். குறிப்பாக பெண்ணின் பெற்றோர் இறப்பினும் கூட துக்கம் கடைப்பிடிக்கத் தேவையில்லை போன்ற நடைமுறைகள் நிச்சயிக்கப்பட்ட திருமணங்களில் ஆண் மையச் செயல்பாட்டை உறுதிசெய்பவை. இச்செயல்பாடுகள் ஒருவருக்குள் பதிந்து போகும் போது அவற்றை மாற்றிக் கொள்ள இயலாமல் சிரமப்படுகின்றனர்.

"அம்மாவுக்கு மட்டுமே தெரியும், எந்தப் பொருள் எங்கே இருக்கிறது என்று. அங்கே ஆண்கள் அடுக்களையில் நுழைவது ஒரு பாவச்செயல் போலவே கருதப்பட்டு வந்தது, வருகிறது. சாப்பிட்ட தட்டைக் கூட எடுத்து வைக்க வேண்டியதில்லை. சாப்பிட்ட தட்டிலேயே கையைக் கழுவிக் கொள்வதே அங்கு எல்லோருக்கும் வழக்கம்." (மேலது, ப.107) இத்தகைய சூழலில் வளரும் ஒருவரால் பெண்களிடம் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை, மாற்றங்களை ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. அதனைப் பிற்போக்குத்தனம் என உணர விடாமல் தடுப்பது நிச்சயிக்கப்பட்ட திருமணங்களில் நிலவும், கடைப்பிடிக்கப்படும் ஆண்மையச் செயல்பாடே ஆகும்.

**ஆடம்பரம்**

திருமணங்களில் தவிர்க்க இயலாத, அதேநேரத்தில் பிறருக்காக மட்டுமே நிகழ்த்தப்படும் ஒன்று ஆடம்பரத் திருமணங்கள். இருவீட்டாரும் கூடிப் பேசி மிக எளிமையாக ஒரு திருமணத்தை நடத்துவதை நிச்சயிக்கப்பட்ட திருமணங்களில் யாரும் விரும்புவதில்லை. தங்களுடைய செல்வாக்கு, செல்வச்செழிப்பு, அதிகாரம், ஆளுமை, பதவி போன்றவற்றைப் பறைசாற்றும் வாய்ப்பாகவே திருமணங்களை நடத்துகிறார்கள். இதனால் அதிகப் பொருட்செலவு ஏற்படுவதுடன் பெண்ணை எப்போதும் உடைமைப் பொருளாக வரித்துக் கொள்வதும், அதன் நீட்சியாக வரதட்சணை கேட்பதும், ஆண்மையச் செயல்பாட்டுக்கு வழிவகுப்பதும் ஆடம்பரச் செலவுகளுடன் நடத்தப்படும் திருமணங்களே.

"திருமண மண்டபத்தில் ஆரவாரம் நிரம்பி வழிந்தது. உறவினர் வருகை, ஊராரின் நெருக்கம் எனக் கூட்டம் முண்டியடித்தது. வண்ண விளக்குகளின் ஒளி வெள்ளம், மிதமான இசை, வாரி ஊத்திய வாசனை திரவியங்களின் மணம் என அந்தப் பகுதி கொண்டாட்டத்தில் மிதந்தது. பெண்களில் பலர் தங்கள் வியர்வை நனைத்த உடலில் நகைகளாக வலம் வந்து கொண்டிருந்தார்கள். "இல்லாதவர்களை இழிவுபடுத்துவது போன்று பல பெண்கள் நகை விலை ஏற்றம் ஆனாலும் நகைகளைச் சுமந்து கொள்வோம் என்று சுமந்து திரிந்தனர்."(மலர்வதி, தூப்புக்காரி, ப.39-40)இந்த நடைமுறையே சமூக நடைமுறையாகப் பின்பற்றப்படுவதால் ஏழைகள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். திருமணம், பெண் குழந்தைகள் போன்றவை சுமையாகக் கருதப்படுவதற்கு இதுவே காரணமாகிறது. "இங்க பிச்சை எடுக்கறவனும் மண்டபத்தில் தான் கல்யாணம் வைக்கிறான் கௌரவம் பார்த்துக்கிட்டு. அதலயும் பாட்டுக் கச்சேரி வேற கூடவே" (வீரபாண்டியன், பருக்கை, ப.109) என்பதிலிருந்து ஆடம்பரத் திருமணங்களின் தாக்கத்தை அறிந்து கொள்ள இயலும்.

திருமணங்களில் உணவு வீணடிப்பு முக்கியமாகக் கருத்தில் கொள்ள வேண்டிய தேசிய இழப்பு எனக் கூறலாம். "நம்ம இந்தியாவில் ஒரு வருடத்திற்கு வீணடிக்கப்படும் உணவின் மதிப்பு 58000 கோடின்னு சொல்லுது"(மேலது, ப.191)என்று வீரபாண்டியன் பதிவு செய்கிறார்.
இவ்வுணவுப் பண்டங்கள் ஏழைகளுக்கு ஒருபோதும் உதவுவதில்லை. "எம்புடு மீதியா களஞ்சி எலையளுல இருக்கு. எம்புடு கூட்டு, கறி ,சோறு ,பாயிசம் பழமுன்னு களஞ்சி இலையில இருக்கு. என் அம்ம தின்ன இருந்தவுடனே எழுப்பி விட்டானே... இங்க எம்புடு ஆகாரம் எச்சியா கெடக்கு"(மலர்வதி, தூப்புக்காரி,ப.45) இவ்வளவையும் வீணாக்குகிறார்கள் என்பதைத் தூப்புக்காரிப் புதினமும் பருக்கைப் புதினமும் பதிவுசெய்கின்றன. "தூரப் போடுற ஆகாரம் கெடச்சா கூட எத்தனையோ பேர் வாழ்ந்துருவாங்க. தூர எறிஞ்சி கழிவாப் போனாலும் கூட பசிக்குற மனுசனுக்குக் கொடுக்காத துஷ்டனுவ வாழுற ஒலகம் இது." (மேலது, ப.45 )

நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள் புறவயமான காரணிகளை முன்னிட்டு நடைபெறுவதால் கணவன் மனைவி உறவு என்பது பொருளாதார அடிப்படையில் அமையும் உறவாக ஆகிவிடுகிறது என்பது தரவுகளின் அடிப்படையில் புலப்படுகிறது.

.

**காதல் திருமணம்**

இன்று தமிழர்களிடையே இருக்கும் மற்றொரு மணமுறை காதல் திருமணம். ஆண், பெண் சுய விருப்பத்தின் பெயரில் செய்து கொள்ளும் திருமணம் சாதி, மத, பொருளாதார அளவீடுகளைத் துறந்ததாக இருக்கும். ஆனால் இன்றைய காலகட்டத்தில் காதல் திருமணங்களையும் மேற்சொன்ன காரணிகள் பாதிக்கின்றன.

**நம்பிக்கைத் துரோகம்**

காதல் திருமணங்களில் மிகப்பெரிய சிக்கலாக நம்பிக்கைத் துரோகம் திகழ்கிறது. குடும்பங்களின் பங்களிப்பின்றி, தனிப்பட்ட ஆணும் பெண்ணும் மட்டுமே முடிவு செய்வதால் எளிதாக இப்பிரச்சினைக்கு ஆளாகிறார்கள். நட்சத்திரவாசிகள் புதினத்தில் இடம்பெறும் அர்ச்சனா, அருணைக் காதல் திருமணம் செய்கிறாள். வீட்டினர் எதிர்ப்போ பிற காரணிகளோ இவர்களுக்குத் தடையாக இல்லை. அருண் வேறொரு பெண்ணுடன் தொடர்பு வைத்துக் கொண்டதால் அர்ச்சனா, அருணைப் பிரிகிறாள்.தூப்புக்காரிப் புதினத்தில் மனோவை நம்பி காதலிக்கும் பூவரசியும் ஏமாற்றப்படுகிறாள். காதல் என்ற உணர்வை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு உறவைத் தொடங்கும்போது திருமணம் என்ற பொறுப்பில் தாக்குப்பிடிக்கத் திணறுகிறார்கள்.

**குடும்பப் பாதுகாப்பின்மை**

காதல் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு வீடுகளில் போதிய உதவியும் அங்கீகாரமும் கிடைப்பதில்லை. எனவே திருமணத்திற்குப் பிறகான பொறுப்புகளைச் சமாளிப்பது இத்தம்பதியினருக்குச் சவாலாக அமைவதை சாஜு கதாப்பாத்திரம் வழி அறியமுடிகிறது. "ஒரு சில சமயம் பேசாம ஒரேயடியா ஊர்ப் பக்கமே திரும்பிப் போய் விடலாமா என்று கூட யோசிக்கிறேன். காதல் கல்யாணத்தால அங்கயும் போயி நிக்க முடியாது"[24] (கார்த்திக் பாலசுப்ரமணியன், நட்சத்திரவாசிகள், ப.197) பனிமலர் என்ற கணினித்துறையில் வேலை பார்க்கும் பெண்ணும் காதல் திருமணம் செய்ததால் பெற்றோர் ஒத்துழைப்பின்மையால் குழந்தை வளர்ப்பில் கவனம் செலுத்த இயலாத நிலையில் தத்தளிப்பதையும் நட்சத்திரவாசிகள் புதினம் பதிவு செய்துள்ளது.

**பொருளாதாரச் சுதந்திரம்**

பொருளாதாரச் சுதந்திரமும் தன்னம்பிக்கையும் நிறைந்த பெண்கள் திருமணம் தோல்வியுறும்போது மணமுறிவை ஏற்கின்றனர். ஆனால் நிச்சயிக்கப்பட்ட திருமணங்களில் சமூக அழுத்தமும் குடும்ப அழுத்தமும் ஆண் பெண் மீது சுமத்தப்படுவதால் மணமுறிவை நாடுவதில் தயக்கம் காட்டுகின்றனர். கால்கள் புதினத்தில் இடம்பெறும் ஷீனாவின் சகோதரி வரதட்சணைக் கொடுமையால் கொலை செய்யப்படுகிறாள். ஆனால் அதற்கு முன்பே அவ்வுறவிலிருந்து வெளியேறும் முடிவை அப்பெண்ணோ அவளின் பெற்றோரோ எடுக்கவில்லை என்பது இங்கே கருத்தில் கொள்ளத்தக்கது.

நிச்சயிக்கப்பட்ட மணம் புரிந்த, சென்ற தலைமுறை, குடும்ப வன்முறைக்கு ஆளானாலும் மண முறிவை நாடாத நிலையினையும் யுவ புரஸ்கார் புதினங்கள் வழியாக அறிந்து கொள்ள முடிகிறது. போத்தைய்யா தன் மனைவியை அடித்துத் துன்புறுத்தினாலும் கால்கள் புதினத்தில் மதுவின் தந்தை அவளது தாயைத் துன்புறுத்தினாலும் அவ்வுறவிலிருந்து வெளியேறும் எண்ணமற்றவர்களாகவே இப்பெண்கள் படைக்கப் பட்டுள்ளனர். நித்திலனின் தாயும் சுரண்டலுக்கு ஆட்படும்போது, தன் உரிமையைக் கூட அறியாதவளாகவே இருக்கிறாள்.

காதல் திருமணம் செய்ய விரும்பும் ஆண் பெண் இடையே பொருளாதார நிலை மிகப் பெரிய பங்கு வகிக்கிறது. மனோ, பூவரசி இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பினாலும் ஒரே சாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இருவருக்கும் இடையேயான பொருளாதார ஏற்றத்தாழ்வு காதலுக்குத் தடையாக இருப்பதைக் காண முடிகிறது. படிப்பு, அழகு, பணம் என்கிற தகுதிகள் அவளிடம் இருந்திருந்தால் நான் கோழையாகியிருக்க மாட்டேன். அப்பாட்ட தைரியமா பேசி இருப்பேன்" மலர்வதி, தூப்புக்காரி, ப.88 )என்ற மனோவின் சிந்தனை இதனை உறுதிப்படுத்துகிறது. இதே நிலையை நட்சத்திரவாசிகள் புதினத்தில் வரும் விவேக்கின் காதலிலும் காணமுடிகிறது. அவன் விரும்பிய பெண்ணிடம் காதலை வெளிப்படுத்த விரும்பும் போது அவன் பொருளாதார நிலை மோசமாக இருப்பதாலேயே பின் வாங்குகிறான்.

**துணை நூற்பட்டியல்**:


1. *அபிலாஷ். கால்கள். உயிர்மைப் பதிப்பகம், சென்னை-18, 2011.*
2. *கார்த்திக் பாலசுப்ரமணியன். நட்சத்திரவாசிகள். காலச்சுவடு, நாகர்கோயில், 2019.*
3. *தவசி.ம. சேவல்கட்டு. புதுமைப்பித்தன் பதிப்பகம், சென்னை-83, 2009.*
4. *பக்தவத்சல பாரதி. பண்பாட்டு மானிடவியல். அடையாளம், புத்தாநத்தம், திருச்சி-310, 2018.*
5. *மலர்வதி. தூப்புக்காரி. மதி புக்ஸ், வெள்ளிகோடு, கன்னியாகுமரி-167, 2017.*
6. *வீரபாண்டியன். பருக்கை. பரிசல் புத்தக நிலையம், சென்னை-05, 2019*


**References:**


1. *Abhilash. Kalkal. Uyirmmai Publications, 2011.*
2. *Bharathi, Bhakthavatsala. Panpaattu Maanidaviyal. Adaiyalam, 2018.*
3. *Karthik Balasubramanian. Natchathiravasigal. Kalachuvadu, 2019.*
4. *Malarvathi. Thooppukkari. Mathi Books, 2017.*
5. *Thavasi M. Sevalkattu. Pudhumaippithan Publications, 2009.*
6. *Veerpandiyan. Parukkai. Parisal Book House, 2019.*



**Copyright (c) Author**

**This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.**